

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.1.2025) முகாம் அலுவலகத்தில், கழக வழக்கறிஞர் அணித் தலைவர் ஆர். விடுதலை மற்றும் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான என்.ஆர். இளங்கோ ஆகியோர் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக சட்டத்துறை மூன்றாவது மாநில மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.1.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவர் ஜி.ஆர். இரவீந்திரநாத் சந்தித்து, 2024ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது அறிவிக்கப்பட்டமைக்காக சந்தித்து நன்றி தெரிவித்து, வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் வீரபாண்டியன், மரு. இரவீந்திரநாத் அவர்களின் மனைவி மரு. சாந்தி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.1.2025) தலைமைச் செயலகத்தில், ஹலோ எப்எம் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் எஸ்.கே.ரமேஷ், தலைமை செயல்பாட்டு அலுவலர் எஸ். சுரேஷ் ஆகியோர் சந்தித்து, ஹலோ எப்.எம். நிறுவனத்தின் கிரீடம் 2024 – சிறந்த அரசியல் ஆளுமைக்கான விருதினை முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கினார்கள். உடன் ஹலோ எப்எம் நிறுவனத்தின் செய்திப்பிரிவு மேலாளர் ஏ.ஜெ. ராஜசேகர், நிகழ்ச்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செல்வி குமுதா ஆகியோர் உள்ளனர்.

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநிலக் கட்சியாக அறிவிப்பு!

# திருமாவளவனின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, ஜன. 12-**

**“விடுதலைச் சிறுத்தை கள் கட்சியை மாநிலக் கட்சியாக அங்கீகரித்து தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பது திருமாவளவனின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



“விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சியாகத் தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

அன்புச் சகோதரர் திருமாவளவன் அவர்களின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரமாக இதை எண்ணிப் பாராட்டுகிறேன்.”

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### இந்த நிதியாண்டிலேயே

# போளூர் புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் எ.வ. வேலு உறுதி!

**சென்னை, ஜன. 12 -**

**சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ. வேலு பேசுகையில், போளூர் புறவழிச் சாலை இந்த நிதி யாண்டிலேயே அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.**

இது குறித்து சட்டப் பேரவையில், நடந்த விவாதம் வருமாறு:-



**அக்ரி கிருஷ்ணமூர்த்தி:** ஆன்மீக நகரமான திரு வண்ணாமலையைச் சுற்றி, ஏற்கெனவே சுற்றுவட்டப் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள செங்கம் சாலையிலிருந்து வேலூர் சாலை வரையிலும், அதேபோல போளூர் நகருக்கு புறவழிச் சாலை அமைத்துத் தரப்படும் என்று இதே மாமன்றத்தில் ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்தச் சாலையையும், இந்த ஆண்டே அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என போளூர் தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

**பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு:**

போளூர் புறவழிச் சாலையைப் பொறுத்த அளவில், இப்போது திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு முடிந்தவுடன், நிலம் கையகப்படுத்தப்பட்டு, சாலை போடப்படும். அதற்கு வேண்டிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இது ஒன்று. ஆன்மீக நகரமான திருவண்ணா மலையிலே வேலூர் சாலையையும், செங்கம் சாலையையும் இணைக்கும் புறவழிச் சாலையை அமைக்க வேண்டுமென்று உறுப்பினர் கேட்டிருக்கிறார்.

வேலூர் சாலையும் தேசிய நெடுஞ்சாலை, திருவண்ணாமலை - செங்கம் சாலையும் தேசிய நெடுஞ் சாலை. ஆக, இரண்டு நெடுஞ்சாலைகளை இணைப்பதற்கு மாநில அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது. திருவண்ணாமலை என்னுடைய சொந்த ஊர் என்கிற காரணத்தினால் எனக்கும் அதில் அக்கறை இருக்கிறது. அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நான்தான். அந்த அடிப்படையிலே, ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி அவர்களிடம் நானே நேரடியாகச் சென்று, அவரிடம் இதுகுறித்து வலியுறுத்திய தன் அடிப்படையில், இந்த வாரம்தான் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிதி வந்த உடனே அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு, இந்த நிதியாண்டிலே அந்த சாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு பதிலளித்தார்.

### துணைவேந்தர் நியமனத்தில் UGC-யின் வரைவு விதிமுறைகளுக்கு கடும் எதிர்ப்பு

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாணவர் அமைப்பினர் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## போராட்டத்தில் தி.மு.க. மாணவரணியினரும் திரளாகப் பங்கேற்பு!

சென்னை, ஜன 12-

துணைவேந்தர் நியமனம் தொடர்பான UGC வரைவு நெறிமுறைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு திரும்பப் பெற வேண்டும் என்று மாணவர் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

துணைவேந்தர் நியமனத்தில் UGCயின் வரைவு விதிமுறைகளைக் கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தி.மு.க. மாணவர் அணி சார்பில், மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில், சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், இந்திய மாணவர் சங்கம், திராவிட மாணவர் கழகம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், முஸ்லிம் மாணவர் அமைப்பு, சமூகநீதி மாணவர் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு மாணவர் அமைப்புகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்றனர்.

அப்போது, ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாணவர் அமைப்பினர் கண்டன முழக்கம் எழுப்பினர்.

UGC நடவடிக்கை கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என்றும் துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநர்களுக்கு அதிக அதிகாரம் என்பது ஆபத்தானது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

துணைவேந்தர் நியமனம் தொடர்பான UGC வரைவு நெறிமுறைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

### சட்டப்பேரவை வளாகம் – “இவன்தான் அந்த சார்” எனும் பதாகைகளை ஏந்தி

# எடப்பாடி பழனிசாமிக்கு கழக சட்டமன்ற உறுப்பினர்கள் பதிலடி!

## பாலியல் வழக்கில் கைதான அ.தி.மு.க. நிர்வாகி புகைப்படத்தை காண்பித்து கண்டனம்!

சென்னை, ஜன. 12 -

பழனிசாமிக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான அ.தி.மு.க. நிர்வாகியின் புகைப் படத்துடன், “இவன்தான் அந்த சார்” என்ற பதாகைகளை ஏந்தி தி.மு.க. உறுப்பினர்கள் சட்டப்பேரவைக்கு வருகை தந்தனர்.

அண்ணா பல்கலைக் கழக மாணவி விவகாரத்தில் அரசியல் ஆதாயம் தேடி பழனிசாமி தொடர்ந்து அவதூறு பரப்பி வருகிறார்.

உண்மைக்கு மாறாக பேசிவரும் பழனிசாமியை கண்டிக்கும் விதமாக, அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான அ.தி.மு.க. நிர்வாகியின் புகைப்படத்துடன், தி.மு.க. உறுப்பினர்கள் சட்டப்பேரவைக்கு வந்தனர்.

பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான அ.தி.மு.க. நிர்வாகி சுதாகரும், எடப்பாடி பழனிசாமியுடன் இருக்கும் புகைப்படத்துடன், “இவன்தான் அந்த சார்” என்ற பதாகைகளை ஏந்தியபடி தி.மு.க. உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

“யார் அந்த சார்” என பேட்ச் அணிந்து தினமும் சட்டப்பேரவைக்கு வந்து, விடை தெரியாமல் இருந்த அ.தி.மு.க. வினருக்கு விடை கொடுத்துள்ளதாக தி.மு.க. உறுப்பினர்கள் தெரிவித்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, பாக வாரியாக நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி பொறுப்பாளர்களுக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்ற சமூக வலைதள பயிற்சி பாசறைக் கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் அ , கழக செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் உமாராணி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சீனிவாசன் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், இந்நிகழ்ச்சியில் சமுக வலைதள பயிற்சியாளர் இளமாறன், திரிசங்கு, ஒன்றிய கழக செயலாளர்கள் சண்முகம், தங்கவேல், சண்முகம், பேரூர் கழக செயலாளர்கள் கருணாநிதி, முருகன், முருகவேல், ராமலிங்கம், மாவட்ட துணைச் செயலாளர் அன்பழகன், பொதுக்குழு உறுப்பினர்கள் சிவக்குமார், சாமிநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பூக்கடைசுந்தர், நவலடிராஜா, மல்லை ஜெகதீஸ்குமார், கார்த்திகேயன், பேரூராட்சி தலைவர்கள் மணி, சோமசேகர், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மற்றும் மருத்துவர் அணி சார்பில்

# பனையப்பட்டியில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா - பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - சைதை சாதிக் - டாக்டர் ரகு. அண்ணாமலை - எழில் மாறன் செல்வேந்திரன் சிறப்புரை!

புதுக்கோட்டை ஜன.12-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மற்றும் மருத்துவர் அணி சார்பில் பனையப்பட்டியில் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு போவை அமைப்பாளர் இரா. மேகநாதன் தலைமையிலும், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் சுதர்சன் வரவேற்புரையிலும் நடைபெற்ற

கழக இளைஞர் அணிச் செயலாளர் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் மாநில மருத்துவர் அணி அணி துணைச் செயலாளர் டாக்டர் ரகு. அண்ணாமலை, மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் எழில் மாறன் செல்வேந்திரன்,

தலைமை கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், ஆலங்குடி செல்வராஜ், இளம் பேச்சாளர் மதுமிதா ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள். ஒன்றியச் செயலாளர்கள் இரா.கணேசன், ஆறு.சிதம்பரம், தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர், துணைத் தலைவர் ,

சுப பழனிச்சாமி, எஸ். பி.நாகராஜன், சுப.சின்னையா, அ.லோகநாதன், டி. ரமேஷ், செந்தில் வேலன், சோ. ராமச்சந்திரன், அ.ஆறுமுகம், பிரகதம்மாள் ராஜேந்திரன், கே.என்.பி.எஸ்.நாடிமுத்து,

தெற்கு மாவட்ட மருத்துவர் அணி தலைவர், துணைத் தலைவர் துணை அமைப்பாளர்கள் டாக்டர் சதீஷ்,

டாக்டர் ராஜசேகர பாண்டியன், டாக்டர் எஸ்.கே.டி. ராஜபிரியா, டாக்டர் கே. இளைய ராஜா, டாக்டர் ஆர்.கண்ணதாசன், பி.கண்ணன், டாக்டர் எஸ்.செந்தில் ராஜா ஆகியோர் முன்னிலை வசித்தனர். மணமேல்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.சீனியார் , அணிகளின் அமைப்பாளர்கள் பாத்திமா பீவி,தேவி, கே.ஆர். ராமசாமி, இரா.சிவக்குமார், கருணாகரன், துணை அமைப்பாளர்கள் அருண் சேகர், மு.ஆனந்தகுமார், கா.சுப்பிரமணியன், ஏ.வி. எம்.வெள்ளைச்சாமி, சி.சந்திரன், ஏ.செந்தில்குமார், பி.அய்யாச்சாமி, கே.ஆர். மாணிக்கம், எஸ்.சோமையா, எஸ்.சபரி ராஜன், எஸ்.சுதாகர், ஜெ.அழகுச் செல்வி, சாமி. சுரேஷ், ஆர்.அண்ணாதுரை, ஆர். வெண்ணிலா, சி.பரிமளா, எம். அரவிந்த் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் ஆக்காட்டி ஆறுமுகம் நன்றி கூறினார். முன்னதாக ஆக்காட்டி ஆறுமுகம் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்களுக்கு அயன் பாக்ஸ், பிளாஸ்க் வழங்கப்பட்டது



கடந்த 2018 ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே உள்ள புக்கிரவாரி ரயில் நிலையத்தில் காரைக்கால் பெங்களூர் விரைவு ரெயிலை 300 பேர் சேர்ந்து காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்கக் கோரி ரயில் மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் சம்பந்தமான வழக்கில் விழுப்புரம் நீதிமன்ற நீதிபதி விடுதலை செய்து உத்தரவிட்டதை தொடர்ந்து கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் – ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயனுக்கு கழக வழக்கறிஞர்கள் இனிப்புகள் வழங்கி அவரை நீதிமன்ற வளாகத்தில் வரவேற்றனர். இதில் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் உடன் உள்ளார்.